


வேலூர் மாவட்டம் காட்பாடியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் 542 பயனாளிகளுக்கு ரூ. 4.73 கோடி மதிப்பிலான இலவச வீட்டு மனை பட்டாக்களை வழங்கினார். அருகில் மாவட்ட கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., நாடாளு மன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த், மாவட்ட ஆட்சியர் வே.இரா சுப்புலட்சுமி, மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., ராணிப் பேட்டை மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமுலு விஜயன், மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணைமேயர் எம்.சுனில் குமார், மண்டல குழு தலைவர் புஷ்பலதா மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## ஜெர்மனி: முதியோர் காப்பகத்தில் தீ விபத்து; 4 பேர் பலி!

பெர்லின், மார்ச் 5–

ஜெர்மனி நாட்டின் மேற்கே வடக்கு ரைன்வெஸ்ட்பாலியா மாகாணத்தில் பெட்பர்க்ஹாவ் நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் முதியோர் காப்பகம் ஒன்று உள்ளது. செவிலியர்கள் பணியாற்ற கூடிய இந்த காப்பகத்தில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது.

இதுபற்றிய தகவல் அறிந்ததும் போலீசார் மற்றும் தீயணைப்பு படை வீரர்கள் சம்பவ பகுதிக்கு விரைந்து சென்றனர். அவர்கள் காயமடைந்த நபர்களை மீட்டு சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

இதில், 4 பேர் பலியாகி உள்ளனர். 58 பேர் காயமடைந்து உள்ளனர். தீ விபத்துக்கான காரணம் பற்றி உடனடியாக தெரிய வரவில்லை. இந்த சம்பவம் பற்றி போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## தேனி தெற்கு மாவட்டம்

## மாவட்ட துணைச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், பொதுக்குழு உறுப்பினர் ஆகிய பொறுப்புகளுக்கான தேர்தல்!

## தேர்தல் முடிவுகள்

**தலைமைக் கழக அறிவிப்பு!**

**திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், தேனி தெற்கு மாவட்ட துணைச் செயலாளராக (பொது) தேர்ந்தெடுக்கப்பட்ட குரு.இளங்கோ, தலைமைச் செயற்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.ஏ.அரசேந்திரன், பொதுக்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட மீரா முகமதுரபீக் ஆகியோர்மீது தலைமைக் கழகம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு கழகத்திலிருந்து நீக்கி வைக்கப்பட்ட காரணத்தால்; தேனி தெற்கு மாவட்டம், மாவட்ட துணைச் செயலாளர் (பொது), தலைமைச் செயற்குழு உறுப்பினர், பொதுக்குழு உறுப்பினர் ஆகிய பொறுப்புகளுக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2024, மார்ச் 2 (சனிக்கிழமை) அன்று ரூ.25000/– வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்" என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;**

**தேனி தெற்கு மாவட்டம், மாவட்ட துணைச் செயலாளர் (பொது) பொறுப்புக்கு க.செந்தில்குமார் – தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்கு ஜி.குமரன் – பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கு ம.ஹக்கீம் ஆகியோர் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவர்களது மனு ஏற்கப்பட்டு,**

**தேனி தெற்கு மாவட்டம், மாவட்ட துணைச் செயலாளராக (பொது)**

**திரு. க.செந்தில்குமார்,** *வார்டு19, சீப்பாலக் கோட்டை ரோடு, சொக்கநாத புரம், சின்னமனூர், தேனி மாவட்டம்.* **அவர்களும்,**

**தேனி தெற்கு மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினராக**

**திரு. ஜி. குமரன்,** *எண்.76ஏ, வார்டு5, குரங்குமாயன் தெரு, உத்தமபுரம், கம்பம், தேனி மாவட்டம்.* **அவர்களும்,**

**தேனி தெற்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினராக**

**திரு. ம. ஹக்கீம்,** *வார்டு24, பழைய பாளையம் ரோடு, கே.கே.குளம், சின்ன மனூர் தேனி மாவட்டம்.* **அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது**

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 02.03.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

### கழக அரசின் சாதனைகளைப் பொறுத்துக்கொள்ள முடியாமல்

# பொய்ப்பிரச்சாரம் செய்கிறார் எடப்பாடி பழனிசாமி!

### கடலூரில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேட்டி!

கடலூர், மார்ச் 5-

"தி.மு.க. அரசின் சாதனைகளைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் பொய்ப் பிரச்சாரம் செய்கிறார் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி" என்று கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கண்டனம் தெரிவித்து பேட்டி அளித்துள்ளார்.

கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி நேற்று (04.03.2024) கடலூர் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

செய்தியாளர்களுக்கு அவர் அளித்த பேட்டியின் விவரம் வருமாறு:-

தமிழ்நாட்டில் போதைப் பொருள் நடமாட்டம் அதிகம் உள்ளது போல, எடப்பாடி பழனிசாமி பொய்ப் பிரச்சாரம் செய்து வருகிறார். தங்களது கூட்டணிப் பிரச்சினைகளைக் கையாள முடியாமல், யார் வருவார் எனக் காத்திருக்கும் அவர், தி.மு.க. மீது அவதூறுகளைப் பேசி வருகிறார்.

தமிழ்நாட்டின் நிதிநிலை அறிக்கையை அனைத்துத் தரப்பினரும் மனதாரப் பாராட்டி உள்ளனர். இதனைத் தாங்கிக் கொள்ள முடியாமல், எடப்பாடி பழனி சாமி ஆர்ப்பாட்டம் நடத்துகிறார்.

நாட்டிலேயே, முதன்மை மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்வதை அவர்களால் ஏற்க முடியவில்லை.

**குஜராத்தில்தான் அதிக போதைப்பொருள்!**

அண்ணாமலை ஏதோ தமிழ்நாட்டில்தான் போதைப் பொருள் அதிகம் இருப்பது போல பேசுகிறார், இந்தியாவிலேயே அதிகமான போதைப் பொருள் கைப்பற்றப்பட்ட மாநிலம் குஜராத். அதானிக்குச் சொந்தமான துறைமுகத்தில்தான் இந்தியாவினுடைய மொத்த போதைப் பொருள் கடத்தலும் நடக்கிறது என்று அனைத்துத் தரப்பினரும் கூறு கிறார்கள். இந்தியா முழுக்கப் போதைப்பொருள் பரவலுக்குக் காரணம் பாஜ.க.தான்.

போதைப் பொருள் விற்பனையில் பா.ஜ.க. தலைவர்கள் பட்டியல் என்னிடத்தில் இருக்கிறது. பஞ்சாப் ஷோன்தி (23 கிலோ heroin வழக்கு) இவர் 12 ஆண்டுகள் சிறை தண்டனை பெற்றவர். அவரை அமித்ஷா கட்சியில் சேர்க்கிறார். அதேபோல பா.ஜ.க. எம்.பி.,யின் மகன் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டு இருந்தும் எந்த நடவடிக்கையும் இல்லை.



இந்தச் சூழலில் எடப்பாடி பழனிசாமி, தமிழ்நாடு அரசுக்கு எதிராகப் பேசுவது வேடிக்கையாக இருக்கிறது.

அ.தி.மு.க. ஆட்சியில் குட்கா வழக்கில் பலரும் சிக்கினர். யார் யார் எவ்வளவு லஞ்சம் வாங்கினார்கள் என்பது பத்திரிகைகளில் வந்தது.

கட்சியைச் சேர்ந்த ஒருவர், போதைப் பொருள் புழக்கம் தொடர்பாகச் செயல்பட்டார் எனக் கேள்விபட்டவுடன், அடுத்த, 24 மணி நேரத்தில் அவரை கட்சியில் இருந்து நீக்கி நடவடிக்கை எடுத்தது தி.மு.க. ஆனால், எடப்பாடி பழனிசாமி அப்படி செய்தாரா?

கடலூர் எம்.பி., மீது கூட ஒரு வழக்கு வந்தது. அவரையும் கட்சி காப்பாற்றவில்லை. அவர் சட்ட ரீதியாக வழக்கைச் சந்தித்து வருகிறார்.

**நினைத்ததை பேசும் பிரதமர் மோடி!**

தமிழ்நாட்டில் நடைபெறும் ஆட்சி மீது குறை சொல்ல முடியாமல், பிரதமர் மோடி நினைத்ததை எல்லாம் பேசுகிறார். அதற்கு எடப்பாடி பழனி சாமி துணைபோகிறார்.

2016 தேர்தலில் கன்டெய்னர் லாரியில் பெரும் பணம் சிக்கியது. தி.மு.க. வழக்குத் தொடுத்தது. அது தொடர்பான சி.பி.ஐ. விசாரணையைத் தொடர்ந்து தாமதப்படுத்துகின்றனர்.

தேர்தல் நெருங்கும் நிலையில், தி.மு.க. கூட்டணியைச் சிதைக்க முயற்சித்தார்கள்; அது நடக்கவில்லை. கூட்டணி வலுவாகத் தொடர்கிறது. இதனை தாங்கிக் கொள்ள முடியாமல் தவறான பிரச்சாரம் செய்கின்றனர்.

நகராட்சித் தேர்தலுக்கு வருவது போல பிரதமர் மோடி அவர்கள் அடிக்கடி தமிழ்நாட்டுக்கு வருகிறார். அவருக்கு ரோஷம் ஏற்பட்டு, மழை நிவாரண நிதியை தமிழ்நாட்டிற்கு ஒதுக்கும் அறிவிப்பை இன்று மாலை வெளியிடுவாரா எனப் பார்க்கலாம்.

இவ்வாறு அவர் பேட்டியளித்தார்.

பின்னர் செய்தியாளர்களின் கேள்விகளுக்கு அவர் பதிலளித்துப் பேசியது பின்வருமாறு:

**கல்பாக்கம் ஈனுலை: தமிழ்நாடு ஏற்கவில்லை!**

கல்பாக்கத்தில் 500 மெகாவாட் திறன் கொண்ட ஈனுலை தொடர்பான விவகாரத்தில் அரசு நிச்சயம் நடவடிக்கை எடுக்கும் என்றார். மேலும், இது தொடர்பான நிகழ்வில் முதலமைச்சர் பங்கேற்காதது, அதனை ஏற்கவில்லை என்பதை காட்டுகிறது எனக் குறிப்பிட்டார்.

ஸ்டெர்லைட் ஆலையைத் தடுக்கும் நடவடிக்கைகளில் தி.மு.க. செயல்பட்டது. அதுபோல, கல்பாக்கம் விவகாரத்தில் நடவடிக்கை எடுப்போம். தமிழ்நாடு மக்கள் ஏற்காததை நாங்கள் ஏற்க மாட்டோம் என்றார்.

தி.மு.க. கூட்டணியில் பிளவு இல்லை. நாளை மாலைக்குள் கூட்டணி பேச்சுவார்த்தை முடிந்து விடும் என நினைக்கிறேன். 7ஆம் தேதிக்குள் தேர்தலுக்கு முழுமையாக தயாராகி விடுவோம்.

இ.வி.எம். இயந்திரத்தில் முறைகேடுகளைத் தடுக்கத் தேர்தல் ஆணையத்தில் பல புகார்கள் தந்து உள்ளோம்.

இவ்வாறு அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி பேட்டியளித்தார்.

### தேவதானப்பட்டி திருவிழா

# வத்தலகுண்டு பகுதியில் கூடுதல் பேருந்துகள்!

### 8ஆம் தேதி முதல் 17 வரை இயக்கப்படுகிறது!

திண்டுக்கல், மார்ச் 5-

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிட், மதுரை கோட்டம் மேலாண்மை இயக்குநர் வெளியிட்டுள்ள அறிவிப்பு வருமாறு:-

தேவதானப்பட்டி மூங்கிலணை காமாட்சியம்மன் திருக்கோவில் விழா வருகின்ற 08.03.2024ம் தேதி முதல் 17.03.2024 வரை நடைபெறவுள்ளது. வத்தலக்குண்டு, பெரியகுளம், ஆண்டிபட்டி மற்றும் தேனி ஆகிய இடங்களிலிருந்து மக்கள் அதிக அளவில் வந்து செல்வதை முன்னிட்டு மேற்குறிப்பிட்ட இடங்களிலிருந்து 08.03.2024 முதல் 17.03.2024 வரை அதிக அளவு சிறப்புப் பேருந்துகள் இயக்க விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

தேவதானப்பட்டி மூங்கிலணை காமாட்சியம்மன் திருக்கோவில் திருவிழாவினை முன்னிட்டு சிறப்புப் பேருந்துகள் இப்போக்குவரத்துக் கழகம் மூலம் இயக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

